DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**OS.No. 169 /2022**

Deposition of Witness: PW1

| | | | |
|---|---|---|---|
| Name | ஈஸ்வரன் | Father Name – பிச்சைமணி | |
| Age | 26 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.02.2026.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் போடி மின்சார வாரியத்தில் Gang Man ஆக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். அதற்கு முன் நான் தற்காலிகமாக மின்சார வாரியத்தில் பணியாற்றியதன் அடிப்படையில் என்னை Gang Man ஆக நியமனம் செய்தார்கள் என்றால் சரிதான். வாதி பிச்சைமணியின் மகன் என்ற முறையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் பிச்சை மணியின் மகன் என்பதை நிரூபணம் செய்ய எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் தனிப்பட்ட முறையில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றும், எனது தந்தையின் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை தான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்து கேட்டு தான் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்குரையில் என்னையோ எனது சகோதரியையோ வாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது சகோதரியின் மகனை இந்த வழக்கில் வாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தை தற்போதும் மிதிவண்டி வைத்துள்ளார் என்றும், அதில் அவர் தேநீர் அருந்துவதற்கு வந்து செல்வார் என்றும் சொன்னால் சரியல்ல, அவர் மிதிவண்டி வைத்துள்ளார் ஆனால் அதை தற்போது அவர் ஓட்டுவதில்லை. எனது தந்தை தற்போது நலமாக தான் உள்ளார் என்றும், நான் ஏதோ ஒரு காரணத்திற்காக எனது தந்தையை சாட்சியம் அளிக்க வர சொல்லாமல் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் எத்தனை என்றால் மூன்று வீடுகளும் ஒரு வயலும் உள்ளது. மூன்று

வீடுகளிலும் பாகம் கோராமல் வழக்குரை வயலில் மட்டும் பாகம் கோரியுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண்.1395/2B ஆகும், வழக்குரை சொத்தின் மொத்த விஸ்தீரணம் 91 செண்ட் ஆகும். வழக்குரை சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 15 செண்ட் என நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களுக்கான ஆவணங்கள் எதையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து 1ம்பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திகொடுத்த தான பத்திரம், 1ம் பிரதிவாதி 2ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் மற்றும் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தை மட்டும் தான் எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தா மாயாண்டித்தேவர் இறந்த விபரம் குறித்து வழக்குரையிலோ அல்லது எனது நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது தாத்தா மாயாண்டித்தேவருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்ய நான் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து தொந்தியம்மாளின் மாமனாருடையது என்று நிரூபணம் செய்ய நான் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொந்தியம்மாள் 06.12.2015ம் தேதி இறந்தபிறகு 7 வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயருக்கு தொந்தியம்மாள் 09.05.2006ம் தேதியே தான செட்டில் மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான், 2022ம் ஆண்டு தான் எங்களுக்கு அந்த விபரம் தெரியும். தொந்தியம்மாள் 2006ம் வருடம் தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்தபோது எனக்கு 6 வயது என்றால் சரிதான். 2006ம் ஆண்டு தொந்தியம்மாள் வழக்குரை சொத்தை தானம் செய்த சமயத்தில் 1ம் பிரதிவாதிக்கு எவ்வளவு விஸ்தீரணம் நிலம் கொடுத்தார்கள் என்றும், எனது தந்தைக்கு எவ்வளவு நிலம் கொடுத்தார் என்று எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் "எனது தந்தை மாயாண்டித்தேவருக்குப் பூர்வீகப் பாத்தியப்பட்ட சொத்தின் வருமானம் கொண்டு அவரது மனைவியும், எனது பாட்டியுமான தொந்தியம்மாள் பெயரில் ஒரு வீடு கிரையம் பெறப்பட்டது." என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தா

மாயாண்டித்தேவருக்கு பாத்தியப்பட்ட வருமானம் ஈட்டக்கூடிய சொத்துக்களின் ஆவணங்கள் ஏதேனும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 03.10.2002 ம் தேதி பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை காசிமாயன், வாதி பிச்சைமணி மற்றும் தொந்தியம்மாள் ஆகியோர் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 03.10.2002 ம் தேதி பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 03.10.2002 ம் தேதி நடைபெற்ற பாகப்பிரிவினையில் எனது தந்தைக்கு எந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 விடுதலை பத்திரம் 29.06.2009 ம் தேதி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 விடுதலை பத்திரம் மூலம் எழுதிக்கொடுத்த வீட்டை 2006 வருடமே தொந்தியம்மாள் 1 ம் பிரதிவாதிக்கு தானம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க 05.03.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.)

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.02.25 16:49:06 +0530

District Munisf,
Bodinayakanur.